
உ

சைவப்பெரியார்

புலோலி

# சு. சிவபாதசுந்தரம்பிள்ளை

அவர்கள்



**17-1-1878 — 14-8-1953**

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

சைவப்பெரியார்

புலோலி

# சு. சிவபாதசுந்தரம்பிள்ளை

அவர்களின்

# நூற்றாண்டு விழா நினைவு மலர்

எழுதியவர்:

க. சி. குலரத்தினம் அவர்கள்

(மில்க்வைற் செய்தி ஆசிரியர்)

●

வெளியிடுவோர்:

சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல்

க. கனகராசா அவர்கள்

மில்க்வைற் தொழிலதிபர்

திருஆலவாய்,

யாழ்ப்பாணம்.

1978

# முன்னுரை

நாட்டுக்கு நல்லதையே செய்யுங்கள் என்று கூறி எம்மாலானவரை நன்மைகளைச் செய்து வருகின்றோம். எங்கள் எதிர்காலம் நன்றாக இருத்தல் வேண்டும் என்பதற்காக எங்கள் இளஞ் சந்ததியினரை நன் மக்களாக்குதல் வேண்டும் என்பது எங்கள் பெருவிருப்பம். சென்ற காலத்தில் எங்கள் நாட்டில் நல்லவர்களாய் வாழ்ந்து நாட்டுக்கு நன்மை செய்த பெரியார்களைப் பற்றி ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்னும் தலைப்பில் எங்கள் மில்க்வைற் செய்தியில் மாதாந்தம் பிரசுரித்து வருகிறோம். சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் பழைய மாணாக்கராய எங்கள் செய்தியாசிரியர் தம் ஆசானைப் பற்றிச் சுவையாக அடிக்கடி எமக்குச் சொல்லுவார். அவர் சொன்னவை யாவும் எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று கருதி அவற்றைச் சிறு நூலாக வெளியிடுகிறோம். எங்கள் அருமருந்தன்ன செல்வச் சிறுவர் சிறுமியர் பயன் பெறுவார்களாக.

வணக்கம்.

மில்க்வைற் தொழிலகம்
"திருஆலவாய்"
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.

க. கனகராசா

உ

சிவமயம்

# தமிழும் சைவமும்

சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம், தொண்டைமண்டலம், ஈழமண்டலம் என்பன தமிழும் சைவமும் தழைத்தோங்கிய பெரும் பிரதேசங்களாகும். தமிழ் மண்டலங்கள் ஐந்தும் தத்துவமாமே என்று பெரியோர்கள் அருளியுள்ளார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தாய சங்ககாலத்திலும் ஈழநாட்டினர் கவியரங் கேறியுள்ளார்கள். ஈழத்துப் பூதன் தேவன் என்னும் புலவர் அகநாநூறு என்னும் தொகை நூலில் பல பாடல்கள் பாடியுள்ளார்.

அவரின் பின்வந்த தமிழர்பலர் ஒவ்வொரு துறையில் மேம்பட்டுத் தமக்கும் சமூகத்துக்கும் பயன்தரும்வகையில் உபகாரிகளாய் உத்தமர் களாய் வாழ்ந்தார்கள். அவர்கள் செய்த உப கரிப்பின் மேம்பாட்டினலேயே நாம் இன்றும்

தமிழர் என்றும் சைவர் என்றும் பேர் பெற்றுப் பெருமையுடன் வாழ்கின்றோம். நம்முன்னோர் நமக்களித்த அருஞ்செல்வத்தைப் பேணிக் காத்து நம் எதிர்காலத்தவரின் நன்மைக்காகும் வகையில் விட்டுச் செல்லல் நமது தலையாய கடமையாகும்.

## சென்ற நூற்றாண்டின் பழுதிலாச் சிறப்பு

ஈழநாட்டிலே தமிழ்கூறும் பிரதேசங்களிலே சென்ற நூற்றாண்டில் தோன்றிய பெரியார்கள் பலர் கல்வி கேள்வியிலும் செல்வச் சிறப்பிலும் வேளாண்மை முயற்சியிலும் பெரிதும் மேம் பட்டுப் பலவிதமான சமூக சேவைகள் செய் துள்ளார்கள்.

எங்கள் நாட்டிலே சகலாகம பண்டிதர்கள், மகாவித்துவான்கள், பல்கலைப் புலவர்கள், அட்டாவதானிகள், சதாவதானிகள், தருக்க கோடரிகள், வித்வசிரோமணிகள், சித்தாந்த சரபங்கள், கலாவிநோதர்கள், அருங்கலைவாணர் கள், நாவலர்கள், அரசியல் விற்பன்னர்கள்

எனப் போற்றிப் புகழப்பெற்ற அறிவாற்றல் நிரம்பிய பெரியோர்கள் பலர் இருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டிலே பிறந்து இருபதாம் நூற்ருண்டிலேயும் எங்கள் மத்தியிலே ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அருந்தொண்டாற்றிய அறிஞர் பெருமகனுரைச் சைவப் பெரியார் எனப் பல்லாயிரவர் போற்றி மதித்தனர்.

## சைவப்பெரியார்

நாவலர் என்ருல் ஆறுமுகநாவலர் அவர்களையும், புலவர் என்ருல் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் அவர்களையும், பண்டிதர் என்ருல் இலக்கணக்கொட்டர் முருகேச பண்டிதர் அவர்களையும், வித்துவான் என்ருல் வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களையும், உரையாசிரியர் என்ருல் மட்டுவில் வேற்பிள்ளை அவர்களையும், சதாவதானியென்ருல் மேலைப்புலோலி மாயாவாததும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களையும் குறிக்கும். இங்ஙனமே சைவப்

பெரியார் என்றால் அது புலோலி சு. சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்களையே குறிக்கும்.

சைவப் பெரியாரை அக்காலத்து மாணவருலகம் "பீ. ஏ மாஸ்ரர்" என்றே வழங்கிற்று. பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் இருப்பவும் சிவபாதசுந்தரம் அவர்களுக்கு பீ. ஏ. மாஸ்ரர் என்பது சிறப்புப்பெயராயிற்று. இயற்பெயர் மறைந்துவிட்டது.

சிவபாதசுந்தரனாருக்குப் படிப்பிக்கத் தெரியாத பாடம் என ஒன்றிருக்கவில்லை. கையில் புத்தகமோ குறிப்போ எதுவுமில்லாமல் எந்த வகுப்புக்கும் எந்தப் பாடத்தையும் எந்தநேரத்திலும் படிப்பிக்கத்தக்க பேராற்றல் அவருக்கிருந்தது. அது அவருக்கு வாய்த்ததொரு வரப்பிரசாதம், கடவுட் கொடை. அவருக்குக் கலைமகள் கடாட்சம் நிறையவிருந்தது. அவர் ஒரு வித்தியாசாகர்.

## உருவப்பொலிவு

சைவப்பெரியாரிடம் முறையாகக் கல்வி பயின்ற பல்லாயிரம் மாணவர்கள் இன்றும் தங்கள் முதுமைப்பராயத்திலும் அவரை மறந்து விடாமல் நெஞ்சார நினைந்து வாயாரப் போற்றி வணங்கி நினைவு கூருகிறார்கள், கண்ணீர் விடுகிறார்கள், பெருமைப்படுகிறார்கள். பேரறிஞர் சிவபாதசுந்தரனார் மாணவரின் மதிப்பையும் பேரன்பையும் தாராளமாகப் பெற்றுக்கொண்ட பெருந்தகையாளர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்தம் ஐரோப்பிய நாகரிகம் எங்கள் நாட்டின் மூலை முடுக்கெங்கும் தலைவிரித்தாடிய காலத்தில், ஆங்கில நடையுடைபாவனைகளை நம்மவர் பின்பற்றிக் காற்சட்டை, மேற்சட்டை, கழுத்து நாடா, தொப்பி, சப்பாத்து அணிந்த காலத்தில், சைவப் பெரியார் தோய்த்துலர்ந்த வெண்ணிற வேட்டியை மடித்துடுத்து, மெல்லிய வெண்ணிற அங்கவஸ்திரம் என்னும் சால்வையைப்

போர்த்து, விபூதி நிறைந்த நெற்றியும், ஒளி பொருந்திய கண்ணும், மெல்லிய புன்சிரிப்பும், ஊசிக்குடுமியும், ஒட்டியுலர்ந்த மெல்லிய உயர்ந்த உடம்புங்கொண்டு குமிழி மிதிதடியில் மெல்ல மெல்ல அசைந்துவரும் உருவம் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனுரின் வைதிகத் திருக் கோலம்.

சுந்தரமூர்த்தி நாயனுரைத் தடுத்தாட் கொள்ளச் சிவபெருமான் தாங்கிவந்த திருக் கோலத்தை மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ என்றும், மெய்த்த நெறி வைதிகம் விளைந்த முதலேயோ என்றும் ஐயுறுகிருர்.

## பண்டிதமணி கண்ட சைவப்பெரியார்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நமக்கு விட்டுச்சென்ற திருக்கைலாய பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாத்துவரும் பேராசான் பண்டித மணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் சைவப்பெரியாரைப் பற்றிச்

கூறியுள்ள மணிவாக்குகள் நமக்குப் பெரு விருந்தாயுள்ளன.

"சிவபாதசுந்தரம்பிள்ளையின் பின் குடுமி பெயர் பெற்ற குடுமி. சைவக்குடுமி. மிகப் பழைமையான குடுமி. தேகம் தசைப்பற்றில் லாதது. என்பு எழுந்து இயங்கும் யாக்கை - கங்காளம். தூயவெண்ணிறமான வேட்டியை மடித்துக் கட்டிக்கொள்பவர். சுற்றியுடுக்கும் வழக்கம் அவரிடம் இல்லை. வேட்டிக்குப் பொருத்தமான வெண்ணிறச் சால்வையால் போர்த்திக் கொள்ளுவார். அங்கியை அவர் விரும்புவதில்லை. கால்களில் செருப்பு மாட்டுவ தில்லை. குமிழிமிதிதடி இட்டுக்கொள்ளுவார்."

## குலமுறைச் சிறப்பு

சைவப்பெரியார் பிறந்த குடும்பம் கல்வி செல்வங்களால் தனிச்சிறப்பு எய்திய பெருங் குடும்பம். நாவலர் ஐயா அவர்களோடு மிக நெருங்கிய தொடர்பும், அவர்தம் வழியில் வந்த

வைதிகஞானமும் கைவரப்பெற்ற குடும்பம். விவேகமுறுக்கேறிய புலோலியிற் பெருஞ் சிறப்புப்பெற்ற குடும்பம்.

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியா சாலையின் தலைமைப்பீடத்தை அலங்கரித்தவர். திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் அவர்களையும், வண்ணை பண்ணை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களையும் விவேகிகளாய் உருவாக்கிய உபாத்தியாயர் விற்பத்திமானாய வேற்பிள்ளை அவர்களின் மனைவியாரின் இளைய சகோதரரே சைவப்பெரியார்.

புலத்துறைபோன புலோலியில் வாழ்ந்த புலவர்களுள் இலக்கணம் தவருமற் பேசுபவர் ஒருவர். அங்காடிக்காரியிடமும் "நங்காய் நங் காய் இம்மாதுளங்கனியின் கிரயம் யாதோ" என்றும், வழிப்போக்கரிடம் "இவ்வழிச் செல்லு கில் எவ்வழி ஏகலாம்" என்றும் கேட்பவர் என்

பர். இத்தகைய புலவரை மக்கள் இலக்கணக் கொட்டர் என வழங்குவர். அவருடைய திரு நாமம் வ. குமாரசுவாமிப்பிள்ளை. அவரின் மைந் தரே உளநூற் புலமைவாய்ந்த உயர்திரு. கலா நிதி கு. சிவப்பிரகாசம் *M. Sc. Phd.* அவர்க ளாவர்.

இலக்கணக் கொட்டரின் சகோதரர் ஒருவர் பேராசிரியர் வ. கணபதிப்பிள்ளை என்பார் தென் மொழி வடமொழி ஆங்கிலம் நிலைகண்டுணர்ந்து திருவனந்தபுரத்து மகாராஜா கல்லூரியிலே வட மொழிப் பேராசிரியராயிருந்தவர். மனோன் மணியம் செய்த சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேராசிரியராயிருந்த காலத்து அவர் நண்பராயிருந்தவர். வில்ஹணீயம் என்னும் சமஸ்கிருத நூலைத் தமிழ் செய்தவர். இன்னும் இரகுவமிசச் சுருக்கம், இந்திரசேனை நாடகம், மாணிக்கவாசகர் புராணம், மார்க்கண்டேயர் புராணம், வேதாரணியேசர் ஊஞ்சல், தருக்க சாத்திர வினாவிடை, பதப்பிரயோக விவரணம் முதலாய நூல்களையும் செய்தவர்.

## சுப்பிரமணியபிள்ளை

இலக்கணக் கொட்டருக்கும், வடமொழிப் பேராசிரியருக்கும் மூத்தவராய சுப்பிரமணிய பிள்ளை என்பார் முறைப்படி கல்வி கற்றபின் வர்த்தகத்தில் ஈடுபட்டுப் பாரதநாடு சென்று புதுச்சேரி, திருவனந்தபுரம் முதலிய இடங்களில் வர்த்தகஞ்செய்துவந்தார். முருகப்பெருமானிடம் பெரும் பக்தி பூண்டு ஆசார நியமங்கள் தவருது வாழ்ந்து வந்தார்.

## பார்வதிப்பாட்டி

இத்தகைய புகழ்பூத்த குடும்பத்திலே எல்லோருக்கும் இளையவராய் இருந்தவர் பார்வதிப்பிள்ளை என்பார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியதோடு இல்லறத்தைத் துறந்து திலகவதியார் போல எல்லோரும் வாழ வேண்டுமென்று நல்லறஞ் செய்து வந்தார். ஔவைப் பாட்டியாரை நினைவூட்டும் வகையில் அறிவாளியாய அவரை எல்லோரும் பாருத்தைப் பாட்டி என்று பட்சமுடன் அழைத்து வந்தனர்.

பார்வதி அம்மையார் வெகு விவேகி. புலவர்கள் வித்துவான்களை எடைபோடுவதில் சமார்த்தியம் வாய்ந்தவர். உறவினராய சின்னஞ் சிறுமியர் இருவரை அவர்தம் பாலகிப் பருவத்திலேயே மதுரைப் பண்டிதைகளாக்கிய மேதை. அவர் மடியில் தவழ்ந்து விளையாடிய மகாலிங்கசிவம் ஏழு எட்டு வயதிலேயே செய்யுள் இயற்றத் தொடங்கிவிட்டார். மரத்தடியில் இருந்து சிரங்கு சொறிந்த நோயாளியைப் பார்த்து நையாண்டியாக "குரங்கே யுனக்கென்ன மரத்தடிதானென்ன குத்தகையோ, சிரங்கே யுனக்கென்ன நெடுந்தொடை தானென்ன சீதனமோ" என்று பாடினர் என்பர்.

## பிறப்பும் இளமையும் கல்வியும்

சுப்பிரமணியபிள்ளை தம் உறவினராய வள்ளியம்மை என்பாரைத் திருமணஞ் செய்து இல்லறமாய நல்லறத்தை நடத்தி வந்தார். அவருக்குப் புதுச்சேரியில் வாழ்ந்த வார்கடைச் சாமியார் என்னும் துறவியார் பழக்கமாயினர்.

வார்கடைச்சாமியார் யாழ்ப்பாணத்துக்கு வந்த போதெல்லாம் பார்வதிப்பிள்ளை அவருக்குப் பணிவிடை செய்து பக்குவியாகி ஞானமார்க் கத்தையும் அறிந்துகொண்டார்.

சுப்பிரமணியபிள்ளையின் தவப்பயனாக வள்ளியம்மையார் மணிவயிற்றில் 17-1-1878இல் சிவபாதசுந்தரம்பிள்ளை பிறந்தார். இளமையில் பாருத்தை மாமியாரிடம் படிக்கவேண்டிய அனைத்தையும் படித்துக்கொண்டார். அயலில் இருந்த ஆங்கிலப் பாடசாலையில் அறியவேண் டிய ஆங்கிலக் கல்வியை அறிந்தபின், பாரத நாட்டுக்குச் சென்று அங்கே திருவனந்தபுரத் தில் சிறிய தந்தையார் பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்களோடு தங்கியிருந்து சென்னைப் பல்கலைக்கழகத்து எப். ஏ. என்னும் இடைநிலைத் தேர்வில் சித்திபெற்றார்.

பின்னர் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அங்கே அக்காலத்துப் புகழ்பூத்துவிளங்கிய சென். யோசேப் கல்லூரியிற் கற்று பீ. ஏ. என்

னும் கலைமாணித் தேர்விற் சித்திபெற்றுப் பட்ட தாரியாயினார். அவர் தமது பட்டப் படிப்புக்குக் கணிதம், தர்க்கம் ஆகிய இரு பாடங்களையும் சிறப்பாகக்கொண்டு தீர்க்க சித்தி பெற்றார். அன்றி ஆங்கிலம், விஞ்ஞானம், வடமொழி முதலியவற்றிலும் விவேக முறுக்கேறி ஈழத்துக்கு மீண்டார்.

## ஆசிரியர் பணி

ஈழத்துக்கு மீண்ட பெரியார் புலோலியில் தமது அயலில் சிலகாலம் கல்வி கற்பித்தபின், திருக்கோணமலைக்குச்சென்று ஆங்குள்ள சென். யோசேப் கல்லூரியில் இரண்டாண்டுகள் பணி புரிந்தபின் யாழ்ப்பாணத்துக்கு மீண்டார்.

இவ்வாறாக 1920ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணச் சைவமகாசபையின் வருடாந்தக் கூட்டம் கீரிமலையில் நடைபெற்றது. அதில் தலைமை தாங்கிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் சைவ இளைஞர்களுக்கு வேண்டிய ஒரு பெருங் கல்லூரியை நிறுவுவதற்கு உடன்

பட்டார். அதனல் 1921ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவுவதற்குச் சூழ்நிலை உருவாயிற்று. இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் உருவான கல்லூரியைப் பொன் கொண்டு சமைத்த கட்டடம் என்று மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் புகழ்ந்தார்.

கல்லூரியை ஆரம்பித்த 22-8-1921ஆய நன் நாளிலே சேர். இராமநாதனுக்கு அருகில் அமர்ந்து தலைமையாசிரியர் பொறுப்பினைச் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் திரிகரணசுத்தியோடு தோள்மேற் கொண்டார். மாணவர் மத்தியில் ஆசிரியர்கள் வாழ்ந்து குருகுலக் கல்வி ஆரம்பிக்கப்பெற்றது. அடுத்த சில ஆண்டுகளில் மேல்வகுப்புகள் ஆரம்பிக்கப் பெற்று ஆங்கிலேயர், இந்தியர் முதலான ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். சேர். அருணசலம் மகாதேவா கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்று நடத்தினர்.

## விக்டோரியாக் கல்லூரி அதிபர்

இதற்குள் சுளிபுரத்திலே செல்லப்பாபிள்ளை என்பார் விக்டோரியா மகாராணியாரின் நினைவாக நிறுவிய கல்லூரியிலே முதல் அதிபராக இருக்குமாறு சைவப்பெரியாரை இதமாக வேண்டிக் கொண்டதைத் தவிர்க்கமுடியாது ஏற்று அங்கே அதிபராயினார்.

அதிபராயிருந்த சைவப்பெரியார் தாமும் ஓர் ஆசிரியரென்பதை மறக்கவில்லை. பிள்ளைகளை மனிதராக்குவதே பெரிய தர்மமெனக் கண்ட அவர் அறநெறியில் வாழ்வைவளம்படுத்துவதற்கான முறையில் பிள்ளைகளுக்குக் கற்பித்து வந்தார். வெறும் வயிற்றுப் பிழைப்புக்கான கல்வியை அவர் கல்வியெனக் கருதுவதில்லை.

நன்னூலிற் சொன்ன பிரகாரம் தாம் ஆசிரியராக அமர்ந்து காட்டினாராகலில், அவரின் உதவியாசிரியர்களும் கருத்தொருமித்துக் கலந்துரையாடிக் கற்பன கற்பித்துக் கடிவன கடிந்து மாணவரை உருவாக்கினார்கள்.

சைவப்பெரியார் எல்லாப் பாடங்களையும் இலகுவாகக் கற்பிக்கக்கூடிய திறமை பெற்றிருந்தமையோடு, உளநூலறிவு என்னும் மனோ தத்துவ சாத்திரத்தையும் நன்கறிந்தவராகையால், அவர் பிள்ளைகளின் மனநிலையை நன்கறிந்து பாடஞ்சொல்லி வந்தார். "அவர் வா பிள்ளை இரு பிள்ளை" என்று கனிவோடு கூறும் இன்சொற்கள் எந்தத் துடியாட்டக்காரனையும் பணியவைக்கும். மாணவரிடையே பரவலாகக் காணப்படும் பகடிகள், சேட்டைகள், விகடங்கள், தந்திரங்கள் எவையும் பெரியாரின் சமூகத்தில் நிகழ்வதில்லை. பிள்ளை அவர்கள் எவரையும் அடக்குமுறை கொண்டு அடக்கியதில்லை. பிள்ளைகள் தாமாகவே அடங்கியொடுங்கிக் கூசிக் குனிந்து பயபக்தியோடு பாடங் கேட்பதில் நாட்டங் கொள்வதியல்பு.

கல்லூரி அதிபராயிருந்த பெரியார் தம் கடமையில் கண்ணும் கருத்துமாயிருந்தார். எந்தெந்தவழிகளில் பிள்ளைகளின் மனவளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் உறுதியாக்க

வேண்டுமோ அந்தந்த வழிகளையெல்லாம் அநுட்டித்தார். சமயகுரவர் நால்வர், சந்தான குரவர் நால்வர் சைவப்பணி புரிந்த செம்மையை மாணவரறிதற்பொருட்டு அவர்தம் குருபூசைத் தினங்களைக் கோலாகலமாகக் கொண்டாடினர். கல்லூரி வளவுகளில் பயிர்களுக்குத் தாமே பட்டை பிடித்து நீர்பாய்ச்சினர் என்றால் அவரின் சேவைமனப்பான்மையை என்னென்பது. அவர் தண்ணீரிறைத்து நின்றபோது வெளிநாட்டவர் ஒருவர் அவரைக் கல்லூரிப் பணியாள் எனக்கருதிப் பின் மன்னிப்புக் கோரியதுமுண்டு. வித்தியாதரிசிகள் எனப்பட்ட கல்வியதிகாரிகள் கல்லூரிக்கு வருகைதருப்போது அவர்களும் வெளியில் காத்திருந்து பெரியார் பாடம் நடத்தி முடிந்தபின், வாருங்கள் என அழைத்தபின் பே அலுவலகத்துள் நுழையும் வழக்கமுள்ளவராய் இருந்தனர்.

## ஓய்வுக்குப்பின்

தமது ஐம்பத்தைந்தாம் ஆண்டுவரை விக்டோரியாக் கல்லூரி அதிபராயிருந்த பெரி

13-1936

யாரவர்கள் ஓய்வெடுத்ததும், அவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்த இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள், பெரியாரை அன்புக்கரம் நீட்டி அழைத்துப் பரமேஸ்வராக் கல்லூரியின் கௌரவ மேற்பார்வையாளராய் அமருமாறு வேண்டினர்.

எம்மைப் போன்ற நூற்றுக்கணக்கான மாணவரை உருவாக்குவதற்கு அந்நியமனம் வாய்ப்பாகவும், வரப்பிரசாதமாகவும் இருந்தது. இங்ஙனம் இருக்கும் நாளில், கலாநிதி கு. சிவப்பிரகாசம் அவர்களை அதிபராகவும், அளவெட்டி சிதம்பரப்பிள்ளை அவர்களை உப-அதிபராகவும் கொண்டு ஆரம்பமான பரமேஸ்வர பண்டித ஆசிரியகலாசாலையின் முதலாட் பாடத்தையும் சைவப்பெரியார் நடத்திவைத்தார். பட்டம் ஏற்றும் சிறுவர் படாத பாடெல்லாம் பட்டு அதனை மேலே ஏற்றுதல் போல, ஆசிரியரும் படாத பாடெல்லாம் பட்டு மாணவரை மேல் நிலைக்குக் கொண்டுவந்து மனிதராக்குதல் வேண்டும்

என்று அவர் சொன்னவை உபநிடதச் சிந்தனை போல உள்ளங்களில் பதிய வேண்டியவை.

## நூலாசிரியர்

உளநூற் புலமையும், தருக்கசாஸ்திரவித்பத்தியும், கணிதத்திறமையும், விளங்கவைக்கும் ஆற்றலும் கொண்டு முறுக்கேறிய விவேகியாய் விளங்கிய பெரியாரவர்கள் படிப்பித்தலோடு அமையவில்லை. நாட்டுக்குப் பயன்படும் வகையில் நல்லறிவுச் சுடர் கொளுத்தும் நூல்கள் பலவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர வாதீனம், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, கொழும்பு விவேகானந்த சபை முதலிய தாபனங்களும், சேர். பொன். இராமநாதன், கலாநிதி நடேசபிள்ளை, கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பிச்சாண்டார் கோயில் பெருநிலக்கிழார் இராசகோபாலபிள்ளை, சென்னை ஜம்புலிங்கம்பிள்ளை, கொழும்பு திருவிளங்க தேசிகர், கொக்குவில் சபாரத்தினமுதலியார் முதலானோர்

களாலும், சிங்கள மந்திரிமார், கல்விப்பணிப் பாளர் முதலியவர்களாலும் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் சிறந்த நூலாசிரியர் என மதிக்கப்பெற்றுள்ளார்.

## நூல்வரிசை

சைவப்பெரியார் காலந்தோறும் எழுதி வெளியிட்ட நூல்கள் மிகப்பல. சைவபோதம், திருக்குறள் மணிகள், சைவக்கிரியை விளக்கம், திருப்பெரு வடிவம், சைவசமயசாரம், சைவத்தின் பெருமை, திருவருட்பயனுரை, திருவாசக மணிகள், கந்தபுராண விளக்கம், தருக்கநூல், அகநூல், ஆறுமுகநாவலர் வரலாறு, இந்துசமயக் கொள்கை, தருக்கநூற்சாரம், * படிப்பிக்கும் முறைகளும் விதிகளும், அளவைநூல் என்பன ஒரு சில. இன்னும் ஆங்கிலத்தில் அவரெழுதி வெளியிட்ட நூல்களுள் Saiva School of Hinduism, An outline of Sivagnana potham, Essentials of Logic, Glories of Saivaism என்பன ஒரு சில. இவற்றைவிட சைவசமயம், சிவபெரு

மான் விரதம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், சந்தானாசாரியார் எனத் தலைப்புள்ள பிரசுரங் களும் எழுதி வெளியிட்டுள்ளரர். மண்ணெண் ணெய் விளக்கிற் பார்க்கத் தேங்காய் எண்ணெய் விளக்கே நல்லது என்று பல காரணங்கள் காட்டி ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை சிலோன் பேற்றியட் என்னும் சஞ்சிகையில் 1931ஆம் ஆண்டில் வெளிவந்தது.

## சின்னஞ் சிறுவர்க்கும் நூல்கள்

பென்னம்பெரிய விடயங்களை, வேதங்களின் உட்பொருளை, சிவஞான போதத்தின் செம் பொருளை, கந்தபுராணத்தின் கவிநயத்தை பென்னம்பெரிய வித்துவான்களுக்கு விளக்கிய சைவப்பெரியார், சின்னஞ்சிறிய சிங்காரக் குழந்தைகளுக்குப் பாலும் தேனும் போல் இனிக்கும் எளிய தமிழில் சைவசமய அறிவைப் புகட்டும் பாலர் வாசகங்களையும் எழுதிப் புகழ்

பெற்றூர். பள்ளிப் பாலர்களுக்குச் சைவபோதக் கதைகள் எழுதும்போது வெறும் சைவம் மாத்திரம் சொல்லாமல், அவர்களுக்கு வேண்டிய நல்லொழுக்கம், குடியொழுக்கம், பணிவு, பெருந் தன்மை, உண்மை முதலிய நாகரிகப் பண்பு களையும் விளக்கிக் கதைகள் எழுதினூர். கிரி சாம்பாள் கதை, துளசித்தாமர் கதை, ஏனூதி நாதர் கதை, சிபிச்சக்கரவர்த்தி கதை, சிவைக் கியர் கதை, தாமோதரர் கதை, விலையுயர்ந்த இரத்தினம் என்பன சிறுவர் மனத்திற் பதியும் பெரிய பண்புகளைக் கொண்டவையாகும். சைவ போதம் இரண்டாம் புத்தகத்தில் சைவசமயம், முப்பொருள், சைவசாதனங்கள், சிவாலய தரி சனம், நித்தியகருமம், அறம் என்பன நேர்த்தி யாய் விளக்கப்பெற்றுள்ளன. இந் நூல்கள் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்காகப் பதிக் கப்பெற்றுப் பயன்பட்டு வந்தன.

## பெரியவருக்கும் பேரின்ப நூல்கள்

சைவப்பெரியார் பொதுமக்களுக்கும் பெரியவர்களுக்கும் பயன்தரும் வகையில் எழு

திய நூல்கள் பலவாகும். திருக்கைலாய பரம்பரைத் தருமபுரத்து மடாதிபதியின் அருளாணையின் வண்ணம் வேதத்தைப்பற்றிய விழுமிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்று மிகுசைவத் துறையை விளக்கி எழுதியதாகும். அதில் வேத முதல்வர், வேதத்திற் கூறப்படும் கடவுள், வேதப்பொருள், வேதப் பொருட்டுணிவு முதலியவற்றைச் சாங்கோபாங்கமாக விளக்கியதோடு, வேதசிவாகம விருட்சத்தின் வேர் முதல் நுனிக் கொழுந்து வரையுள்ள வியத்தகு அமைப்பையும் விளக்கியுள்ளார்.

இவர் சைவசமயம் சம்பந்தமாக எழுதிய ஆங்கில நூல்களும், இந்துசமயப் பிரிவில் சைவம் என்னும் நூலும், சிவஞானபோதம் என்பதும் சைவத்தின் மகத்துவம் என்பதும் உலகப்புகழ் பெற்றவை. இந்துசமயத்தில் சைவம் என்னும் நூல் காசி இந்துப் பல்கலைக் கழகத்துப் பட்டப் படிப்புக்குப் பாடநூலாயுள்ளது. பெரும் பேராசிரியர் இராதாகிருஷ்

ணன் காசியில் சொல்லாத சைவத்திறனையெல்லாம் சைவப்பெரியார் பரப்பியுள்ளார்.

## பன்முகப்பணி

சைவப்பெரியார் படிப்பித்தலோடும் நூல்கள் எழுதுவதோடும் அமையாமல் ஆசிரிய சங்கங்கள், கல்விக்கழகங்கள், கல்விவிசாரணைச் சபைகள், சனசமூக நிலையங்கள், மடங்கள், மதுவிலக்கு மகாசபைகள், சைவமகாநாடுகள், சீர்திருத்தச் சபைகள், திருப்பணிச் சபைகள், முதலிய பொதுத்தொண்டுகளில் நடுநாயகமாய் அமர்ந்து உயர்ந்த இலட்சியங்களைத் தொண்டர்கள் மனசிற் கருக்கொள்ளச் செய்து நாடெங்கும் பரவும்வகை செய்துவந்தார்.

அக்காலத்து உயர் நீதிமன்றங்களின் வைகல்கள் யாழ்ப்பாணத்திலே நடைபெறும் போதெல்லாம் சைவப்பெரியார் யூரிமார் எனப்படும் நடுவர் சபையில் முதல்வராய்த் தெரியப்பெற்று வழக்குகளை வெகுதிறமையாக அவதானித்து விளங்கி, நீதியரசருக்கு நீதிவழங்குவ

தற்கு உறுதுணையாய் இருந்தார். எனவே அவரைக் கண்டாலே எதிரிபக்கத்து நியாயவாதிகள் அவர் நடுவர் சபையில் இடம்பெறுவதைத் தடுத்துவிடுவதற்கு முயற்சி செய்வதும் உண்டு. பாரதூரமான பெரிய கொலை வழக்குகளை ஒரு நொடியில் ஒரு கேள்வியில் வைத்து உடைத்தெறியவல்ல நியாயவாதிப் புலிகள், சைவப் பெரியாரின் நேர்மையையும் அறிவாற்றலையும், நடுநின்ற நன்நெஞ்சத்தையும் வெகுவாக அஞ்சினர். நியாயவாதிகள் இருபக்கத்து நியாயங்களையும் விளக்கி நீதியைப்பெறவே வாதிடுகின்றனர். நீதி பரிசுத்தமானது. பண்டு மால் அயன் அறியா நீதியே என்று சிவபெருமானைத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

எனவே அதிகாரத்துக்கும் மிரட்டலுக்கும் எட்டுணையும் அஞ்சாது நடுவர்சபையினருக்கு நீதியினை எடுத்துக் கூறுவதில் சைவப்பெரியார் சமர்த்தர். அவர் கூறும் முடிபுக்கு ஏனைய நடுவர் ஏகோபித்த அபிப்பிராயம் தெரிவித்தல்

வழக்கம். அவர் நடுவராய் இருந்த சபைகளில் அபிப்பிராய பேதம் எழுவதில்லை.

## பேச்சுவன்மை

சைவப் பெரியாரின் பேச்சுவன்மை பெரிது. பெரும் குழப்பமயமாக நடைபெறுங் கூட்டங்களிலும் சைவப்பெரியார் அமைதியை நிலை நாட்டி ஆரவாரங்கள் மெய்ப்பாடுகள் இல்லாமற் பேசுவார். அவர் பேசுந்திறனைப் பேசுந்திறன் வாய்ந்த பண்டிதமணி கலாநிதி கணபதிப் பிள்ளை ஐயா அவர்கள் இவ்வாறு குறிப்பிடுவர்.

"பிள்ளை அவர்கள் பெருஞ் சிந்தனையாளர். எடுத்துக்கொண்ட விஷயத்தை நன்கு ஆராய்ந்து, தெளிவு அடைந்தபிறகுதான், மேற்கோள் வேறு, ஏது வேறு, திருஷ்டாந்தம் வேறு ஆக, அறுத்தறுத்துச் சம்பாஷிப்பார்கள் பேசுவார்கள். அவருடைய உபந்நியாசம் தாக்க செடிலமானது. தனியழகு படைத்தது. அவர்களுடைய பேச்சில் இலக்கியரசனை தேன் சொட்டிக்கொண்டேயிருக்கும். தாம் சிரிக்காமல்

கேட்கிறவர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பார்கள்".

"அவர்களுடன் சம்பாஷிப்பவர்கள் வெகு கவனமாயிருக்கவேண்டும். கண்டபடி உளறிக் கொட்டினால், விட்ட பிழைகளை விட்டவர்கள் உணரும்படி, கோபிக்காமல் ஒத்துக் கொள்ளும்படி வகுத்து வகுத்துக்கிரமப்படுத்தி எடுத்துக்காட்டுவார்கள். அப்படி அவர்கள் எடுத்துக் காட்டும்போது, ஒரு தனிச்சிறப்பு ஒளிவிடும். பிள்ளையவர்களின் தனிவிவேகம் நெற்றியிற் பிரகாசிக்கும். விவேகங்கிளர்ந்து, நியாயிக்குந்திறன் உச்சநிலை அடையுஞ் சமையங்களில், மெய்ப்பாடு தாங்காமல், மெலிந்த சரீரம் குலுங்காமற் குலுங்கிச் சிறிதே சிரிப்பு வரும். அப்பொழுது அவர்களுடைய சுட்டு விரல் சிறிது வளைந்து நியாயத்தைச் சுட்டிக் காட்டும். அவர்களுடைய வாதம் உண்மைகளைக் காண்பதிலும் சைவத்தை நிலைநாட்டுவதிலுமே உபயோகமாய்ப் பெரும்பயன் அளித்தது".

## தமிழ்நாட்டிற் பெற்றபுகழ்

சைவப்பெரியார் தமிழ் நாட்டிற் பெற்ற புகழ் பெரிது. அதனைச் சுருக்கிக் கூறமுடியாது. அவர் 1918ஆம் ஆண்டில் வெளியிட்ட நூல்களை அறிந்த தமிழ்நாட்டுச் சைவப் பெருமக்கள் அவரைப் பெரிதும் மதித்தனர். அவர் தல யாத்திரை செய்வதற்கு அங்கே சென்ற காலங்களில் அவரை வரவேற்றுப் பெரிதும் உபசரித்துப் பாடம் நடத்தவும் பேசவும் வைத்தனர். திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை என்பார் சைவப்பெரியாரிடம் பேரன்பு பூண்டிருந்தார்.

சைவப்பெரியார் பிட்சாண்டர் கோயில் பெருநிலக்கிழார் இராசகோபாலபிள்ளை அவர்களின் ஆனந்தவிலாசம் என்னும் மாளிகையில் தங்கிச் சிவஞான சித்தியார் பாடம் நடத்திச் சிறப்பித்தார். பின்னர் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீன மடாதிபதிகளின் விருந்தினராயமர்ந்து நல்லசாமிப்பிள்ளையவர்களின்

சிவஞான சித்தியார் ஆங்கில மொழிபெயர்ப்பைத் திருத்தியும், புதுப்பித்தும் அச்சிடுவித்தார். சிலகாலம் சிதம்பரத்தில் தங்கியிருந்து சைவப் பிரசங்கங்கள் செய்து புகழ்பெற்ருர்.

## தருமபுரவாதீனம் தந்த புகழ்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் பலவற்றை நம்மொழியிற் பெயர்த்துப் புகழ் பெற்ற பெரியாரவர்கள், நம்நாட்டுச் சித்தாந்த சாத்திரத்தை உள்ளது உள்ளபடி உலகறியச் செய்யும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. பெயரும் புகழும் பெற்ற கிறிஸ்த்தவப் பெண்மணி ஒருத்தி தனது கலாநிதிப் பட்டத்து ஆய்வுக் கட்டுரைக்காகச் சைவசித்தாந்தத்தை ஆங்கிலத்தில் வரைந்திருந்தார். அதில் சில பகுதிகள் திரித்துக் கூறப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டு கொதித்தவருள் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து மடாதிபதிகளும் ஒருவர். திரித்துக் கூறிய பகுதிகளைச் சீர்பெற எழுதி நல்லறிவுச்சுடர் கொழுத்துவதற்கு ஆங்கிலம்

வல்ல வைதிகர் சைவப்பெரியார் ஒருவரே எனக்கண்ட மகாசந்நிதானம் அவர்கள் அப்பணியைச் சிவபாதசுந்தரம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

பிள்ளையவர்கள் தேவாரமாதிய திருமுறைகள், சித்தாந்தசாத்திரங்கள், சைவாகமங்கள், வேதவேதாங்கங்கள், தரிசனங்கள் ஆகியவற்றில் ஊறிப்பழுத்தவராகலில், சிவஞான போதத்தின் செம்பொருளை ஆணித்தரமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்கள். நாற்பத்தெட்டுப் பக்கங்கள் கொண்ட சிறு நூலில் பெரிய பொருளைச் செம்மையாகக் காட்டினர்கள். அதிலே சிவாக்கிரகயோகிகள் என்பார் வடமொழியில் பன்னீராயிரம் சுலோகங்களில் எழுதிய பாடியத்தின் கருத்தையும், தமிழில் மாதவச் சிவஞானயோகிகள் எழுதிய சிவஞான மாபாடியத்தின் கருத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். உண்மையை நிலைநாட்டிய உத்தமரின் பெருமையை வைதிகஉலகம் பாராட்டியது.

## சைவத்துறை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரின் அவதாரச் சிறப்பைக் கூறவந்த சேக்கிழார் சுவாமிகள் வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க அவர் திருவவதாரஞ் செய்தார் என்பர். பன்முகஞானம் பெற்றுப் பலதுறைகளில் முறைபோன பிள்ளை அவர்களின் மிகு சைவத்துறை அவரைப் பெரியாராக்கியது. அதனுலேயே அவரைச் சைவப்பெரியார் என எல்லோரும் அன்புரிமையோடு வழங்கிவந்தனர்.

முன்னுள் கல்வி மந்திரி கலாநிதி கன்னங்கரா அவர்கள், கல்விப் பணிப்பாளர் ஏச். எஸ். பெரேரா அவர்கள், கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் சைவப்பெரியாருடன் நெருங்கிப் பழகியவர்களாதலால் பிள்ளையவர்களின் கல்விக் கொள்கை அரசாங்கத்தின் பாடத்திட்டத்திலும் இடம்பெற்றிருந்தது. சமயக்கல்வி கட்டாய பாடமாவதற்கும் தாய்மொழிக் கல்வி தலைதூக்குவதற்கும் காரணராயிருந்தவருள் சைவப்பெரியாரும் ஒருவர்.

பிள்ளையவர்களின் சைவத்துறைக்கு வித்திட்டவர் வார்கடைச்சுவாமி அவர்களே என்பதை முன்னர் அறிந்தோம். சைவப்பெரியாரின் தந்தையார் ஆறுமுகநாவலரவர்களிடத்துப் பெருமதிப்புக் கொண்டவராகலில் சமயம்வாய்க்கும்போதெல்லாம் அவரைக்கண்டு வணங்கியும் சைவத்துறையைப் பழகியிருந்தார். அன்றி அயலூரில் வாழ்ந்த சிவசம்புப்புலவரிடமும் சைவத்துறையை அறிந்திருந்தார். இவ்வாற்ருல் பிள்ளையவர்களிடம் இவையாவும் இளமை தொடக்கமே வெகுவாகப் பதிந்திருந்தன எனலாம்.

## அடக்கமும் பணிவும் நன்றியறிதலும்

தமிழர் நாகரிகத்தில் அதிலும் சைவப் பண்பாட்டில் அன்பும், அடக்கமும், பண்பும், பணிவும், நன்றியறிதலும் பெருந் தூண்களாகும். சைவப்பெரியார் தம்மிலும் பார்க்கப் பெரியாராயிருந்தவர்கள் முன் அடக்க ஒடுக்கமாக ஒதுங்கி நின்று உரையாடுங் காட்சி,

பழைய உபநிடதகாலத்துக் குருசீட பாரம்பரியத்தை உணர்த்தும். தமக்கு இளமையிற் கல்வி கற்பித்த பார்வதி மாமியாரின் துணையை மறக்க மாட்டாத பெரியாரவர்கள் தாம் எழுதிய அகநூலில் தம் நன்றியைத் தெரிவித்துள்ள வாசகம் போற்றத்தக்கது. "இந்நூல் எனது மாமியாரும் எனக்குத் தமிழ்க்கல்வியூட்டியவருமாகிய தவச் செல்வியார் வ. பார்வதியம்மையாருடைய திருவடிகளுக்குச் சாத்தப்பட்டது" என்பது பெரியாரின் பண்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்ற வாசகம்.

இன்னும் தாம் எழுதிய திருவருட்பயன் உரைநூலில் "இந்நூற்கு உரையெழுதும் அதிகாரம் மெய்ஞ்ஞானிகட்குளதாகவும், விளக்கமான கல்வியறிவும் சிவநேயமுமின்றி உரையெழுதத் துணிந்தமையைக் காண்போர், மெய்யறிவை வளர்ப்பதே இதன் நோக்கமென்றறிவாராயின், செயலால் வருந்துன்பத்தை நோக்கத்தால் வரும் இன்பத்தால் ஒருவாறு தீர்த்துக் கொள்வர். இதிலுள்ள பதவுரை நிரம்ப

வழகிய தேசிகரது பொழிப்புரையைத் தழுவியும், விசேடவுரை சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றின் பேருரைகளையும் துணையாகக் கொண்டும் எழுதப்பட்டன. பெரியோர் இதில் உள்ள குற்றங்களையும், பிழைகளையும் எடுத்துக்காட்டித் துணைபுரியக்கடவர்".

## தூய வாழ்வு

சைவப் பெரியாரின் தூய வாழ்வு அறுபத்து மூவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதாகும். அகமும் புறமும் தூய்மையாக வாழ்ந்து அவர் பணி செய்தவர். அவர் தனித்து நின்று செய்த பணியும் சாதனைகளும் பல சங்கங்கள் சபைகளாலும் சாதிக்க முடியாதவையாகும். தந்தையார் மேற்கொண்டிருந்த சுப்பிரமணியர் வழிபாட்டினைத் தாமும் மேற்கொண்டிருந்தார். கந்தவனக் கடவையில் வெளி வீதியில் சிறு கொட்டிலமைத்துத் தவவாழ்வு வாழ்ந்து தினமும் ஆறு காலப் பூசை கண்டின்புற்று வந்தார்.

ஆறுமுகநாவலர் அவர்கள் 1872ஆம் ஆண்டில் தேன்பொந்து என்று திருக்கேதீஸ்வரத்தைப்பற்றி எழுதியவற்றை நெஞ்சிற்கொண்டு ஆலயப் புனருத்தாரண வேலைகளுக்கு அகலமாக வழிவகுத்து அரும்பணி புரிந்தார். அதன் புனருத்தாரண சபையின் தலைவராயிருந்து திருப்பணி வேலைகளுக்கு ஆவனசெய்தபோது, ஆனந்த நடனமிடும் நடராசப் பெருமானின் அற்புதத் திருவுருவத்தைத் தாமே தமது செலவில் அழகாகச் செய்வித்துக் கொடுத்தார். மலேசியா, தமிழ்நாடு முதலிய இடங்களில் தம் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதிப் பொருளீட்டிக் கொடுத்தார். ஆலயத்தருகில் திருஞானசம்பந்தர் மடத்தினை அமைப்பதற்கு வழிவகுத்தார்.

தாம் எழுதிய நூல்கள் யாவற்றையும் சைவம் வளர்க்கும் சபைகளுக்கு உரிமை செய்துள்ளார். தமக்கென எதையும் சேமிக்காது பட்டம் பதவிகளில் பற்றின்றிப் பணிசெய்தார். இங்ஙனம் பணிசெய்து வந்தவருக்குப் பட்டம்

வழங்கவோ பதக்கஞ் சூட்டவோ பட்டுப் போர்க்கவோ எவரும் முற்படத் துணியவில்லை எவரேனும் முற்பட்டிருந்தாலும் அவர் அகப்பட்டிரார்.

## இறுதி மூச்சு

"எதைப்படித்தாலும் அந்தப் படிப்பின் முக்கிய நோக்கம் கடவுளை வழிபடுதல் என்பது மெய்ஞ்ஞானிகளின் போதனை. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது ஆறுமுகநாவலர் அவர்களின் வாக்கு. சமயக் கல்வியின் முதலும் நடுவும் இறுதியும் கடவுளை அன்போடு முறைப்படி வழிபடுதலாம்.

இந்த அன்பு வளர்வதற்குச் சிவனடியார் சரிதைகளைக் கற்றலும் கேட்டலும் இன்றியமையாதவைகளாம் நூல்கள் தாமாக அறிவை ஊட்டமாட்டா. அவற்றிலுள்ள அறிவை ஊட்டுவதற்கு ஆசிரியர் வேண்டும். பிதா தெய்வமாகுக. மாதா தெய்வமாகுக. ஆசாரியர் தெய்வமாகுக".

சைவப்பெரியார் தம் உடல் பொருள் ஆவி அத்தனையையும் சைவத்துக்கே அர்ப்பணித்துச் சைவ வாழ்வு வாழ்ந்தார். அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவ மூச்சாய் இருந்தது. அவரின் இறுதி மூச்சு திருக்கேதீஸ்வர புனருத்தாரண மூச்சு. சைவத்தின் பெருமை என்னும் தமது இறுதி நூலை எழுதி முடித்த பின்னர், அன்று 14-8-1953 இல் அவர் தமது இறுதி மூச்சைவிட்டார்.

**"Each man in his turn plays many parts"**

"என்று மின்பம் பெருகு மியல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்".

சுபம்.

**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்**

**කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ**

**READING MAKES A MAN PERFECT**

By Courtesy · MILK WHITE SOAP WORKS, Jaffna (Ceylon)

இப்புத்தகத்தை வாசித்தபின்னர்
தயவுசெய்து பிறருக்குங்
கொடுத்து உதவுங்கள்.

MWS
மில்க்வைற்

மில்க்வைற்
தயாரிப்புகளுக்கு
உங்கள் அமோக ஆதரவு
எங்கள் அறப்பணிக்கே
உதவுகிறது.

ஆதரவு பெருக
அறப்பணி பெருகும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாண[illegible]
☎ 7233

கிளை :

79, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12. ☎ 36063

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்